**செ. கு. எண்: 35** **நாள்: 02.03.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 2.3.2019</u>

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், கக்கனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏழுமலை என்பவரின் மகள் செல்வி கௌசல்யா, திரு. மணி என்பவரின் மகள் செல்வி மணிமொழி மற்றும் திரு. சண்முகம் என்பவரின் மகள் செல்வி பௌதாரணி ஆகிய மூன்று நபர்கள் விவசாய கிணற்றில் குளிக்கச் சென்ற போது, நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், பூனாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தமிழரசன் என்பவரின் மனைவி திருமதி சித்திரா என்பவர் நெல் அறுக்கும் இயந்திரத்தில், சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் புறவழிச் சாலையில், மினிவேன் மற்றும் பேருந்துக்கள் மோதிய விபத்தில், பேருந்தில் பயணம் செய்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. அம்சத்குமார், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.முருகன், திருமதி பிரவீன்ஜீவரூபி, ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பாஸ்கர், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பிரதீப் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. தவசிமுத்து ஆகிய ஆறு நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், அரசு கவின் கலைக் கல்லூரியில் இறுதி ஆண்டு படித்து வந்த, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், சின்னமலை கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் (லேட்) என்பவரின் மகன் திரு. விக்னேஷ்குமார் என்பவர் வட மாநிலத்திற்கு சுற்றுலா சென்ற இடத்தில் உயிரிழந்துள்ளார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், கீழையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகராஜன் என்பவரின் மகன் திரு. சரவணன் என்பவர் ரஷ்யா நாட்டு கடல் பகுதியில், கப்பல் தீப்பிடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், மேலக்கொந்தை கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜன் என்பவரின் மகன் திரு. ராஜவேல் என்பவர் தனது கூரை வீடு தீப்பிடித்து எரிந்ததில், உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், எக்கியார்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்தானகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. மண்ணாங்கட்டி என்பவர் கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது, கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், தெற்கு பெத்தாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாயாண்டி என்பவரின் மகன் திரு. பரமேஸ்வரம் என்பவரின் மீது வீட்டின் கூரை இடிந்து விழுந்ததில், உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் எதிர்பாராத விதமாக உயிரிழந்த 15 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட சம்பவங்களில் **உயிரிழந்த 15 நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**